சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 92/2021

பெயர் திரு. ஞானசேகர் த/பெ. ஏழுமலை நாள்.24.09.2025

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வாதிகள் நான்கில் இரண்டு பாகம் கோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கில் எந்த புல எண்களுக்கு வாதிகள் பாகம் கோரியுள்ளனர் என்ற விவரம் எனக்குத் தெரியும். என் பாட்டனார் பெயர் சொக்கலிங்கம் என்றாலும், அவர் மனைவிதான் 1ம் வாதி என்றாலும் சரிதான். ஏழுமலை, முத்துலட்சுமி மற்றும் அண்ணாதுரை ஆகியோர் அவரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

2) வழக்கு 1 முதல் 5 இன சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு என் பாட்டனார் சொக்கலிங்கம் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். சொக்கலிங்கம் உயிருடன் உள்ளவரை பாகப்பரிவினை ஏதும் ஆகவில்லை என்றால் ஆகிவிட்டது. 2006ல் பாகப்பிரிவினை ஆனது. அந்த பாகப்பிரிவினை ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது போல் 2006ல் பாகப்பிரிவினை ஆகவில்லை என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. தேதி, மாதம் எனக்கு தெரியாது. அப்பொழுது எனக்கு 13 வயது. 13 வயதில் எனக்கு பாகப்பிரிவினை ஆன விவரம் எனக்கு தெரியும். இதுநாள் வரை அந்த சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை ஆகவில்லை என்றாலும், நான் பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. அந்த பாகப்பிரிவினை ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அந்த பாகப்பிரிவினை என் தகப்பனார் ஏழுமலை, சொக்கலிங்கம், கல்யாணி, முத்துலட்சுமி, அண்ணாதுரை

ஆகியோருக்கு மத்தியில் ஆனது. அந்த ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்தால்தான் பாகப்பிரிவினையை ஊர்ஜிதம் செய்ய இயலும் என்றால் சரிதான். அந்த பாகப்பரிவினை ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு பாகப்பரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றாலும், வாதிகளுக்கு பாகம் கொடுக்கக் கூடாது என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பாகப்பிரிவினை ஆன விவரத்தை எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை.

3) என் பெயரில் என் தகப்பனார் வாங்கிய கிரயம் 2006ம் வருடம் 8ம் மாதம் எனக்கு தெரிய வந்தது. அந்த கிரய ஆவணத்தில் முத்துலட்சுமி மற்றும் கல்யாணி தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனாரும் அதில் தரப்பினர் இல்லை என்று சொன்னால் அவர் என்னுடைய பாதுகாவலராக அதில் இருந்தார். என் தகப்பனார் அதில் எனக்கு கிரயம் எழுதி கொடுக்கவில்லை. பொதுவாக பூர்வீக சொத்தைப் பொறுத்து அனைத்து வாரிசுகளும் சேர்ந்து எழுதி கொடுத்தால்தான் ஆவணம் செல்லும் என்றால் சரிதான். என் அத்தை மற்றும் ஏழுமலை ஆகியோர் பி.த.சா.ஆ.1ல் தரப்பினர் இல்லை என்பதால் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாகம் கிடைக்கக் கூடாது என்பதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 6 முதல் 8 இன சொத்துக்கள் கல்யாணி, ஏழுமலை, முத்துலட்சுமி மற்றும் அண்ணாதுரை ஆகியோரின் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல. 6 முதல் 8 இன சொத்துக்ள் என் தகப்பனார் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் கூட்டுக் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் அவர் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் என் தகப்பனார் விவசாயம் தான் செய்து வந்தார் என்றால் 20 எருமை மாடுகள் வைத்து தொழில் செய்து வந்தார். அவ்வாறு 20 எருமை மாடுகள் என் தக்பனார் வைத்திருந்ததாக எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) என் தகப்பனாருக்கு 6 முதல் 8 இன சொத்துக்களை வாங்குவதற்கு தனிப்பட்ட வருமானம் கிடையாது என்றாலும், கூட்டுக் குடும்ப சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட வருமானத்தை வைத்து தான் அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டன என்றாலும் சரியல்ல. 6 முதல் 8 இன சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கக் கூடாது என்பதற்காக என் தகப்பனார் பெயரில் சுயமாக கிரயம் வாங்கப்பட்டதாக பொய் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. சொக்கலிங்கம் இறந்த பிறகு வழக்குச் சொத்துக்களை கல்யாணி, ஏழுமலை, முத்துலட்சுமி மற்றும் அண்ணாதுரை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. ஏழுமலை மற்றும் முத்துலட்சுமி இறந்த பிறகு வாதிகள் மற்றும் நாங்கள் அனைவரும் வழக்குச் சொத்துக்களை கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

5) 2014ம் வருடம் மேஜர் ஆகிவிட்டேன். நான் மேஜரானபின்புதான் இளவர் சமயத்தில் என் யெரில் வாங்கப்பட்ட கிரயம் ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நான் இளவர் திரும்பிய பின்பு கூட்டு உரிமையாளர்களுக்கு வழக்குச் சொத்தை விட்டு வெளியேற அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அவர்கள் வழக்குச் சொத்துக்களுக்கு வரவேயில்லை. எதிரிடை அனுபவம் மற்றும் ஊஸ்டர் கட்சிகளை வாதிகளுக்கு எதிராக நான் எடுக்க இயலாது என்றால் சரியல்ல. என்னுடைய உரிமை என்பது மற்ற கூட்டு உரிமையாளர்களையும் சேர்த்துதான் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்யவில்லை என்றாலும் மற்ற கூட்டு உரிமையாளர்களின் அனுபவத்தையும் சேர்த்து அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

6) கூட்டு உரிமையாளர்களை வெளியேற்ற நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் கண்டுள்ள புல எண் 42/8 பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றாலும், அதனால் அதனை இவ்வழக்கில் சேர்க்கத் தேவையில் என்றாலும் சரியல்ல. என்

பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வாதிகளிடம் இருந்து நான் அனுமதிக் கடிதம் ஏதும் வாங்கவில்லை. பட்டா மாற்றம் செய்ய அவர்களுக்கு நான் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. முறையான அறிவிப்பு ஏதும் இல்லாமல் பட்டா மாற்றம் செய்தது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும், வருவாய் ஆவணங்களை என் பெயரில் மாற்றிக் கொண்டதால் எனக்கு தனிப்பட்ட உரிமை வராது என்று சொன்னால் சரியல்ல. சொத்து வரி செலுத்தினால் மட்டும் கூட்டுரிமை பாதிக்கப்படாது என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் இன்று வரை பாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும், வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் பாகம் உண்டு என்று சொன்னாலும் சரியல்ல. வாதிகள் வழக்குச் சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியவாறு வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.